中国银行 BANK OF CHINA

Head Office : 1 Fuxingmen Nei Dajie, Beijing 100818, People's Republic of China.
Tel : (86) 10-6659 6688 Fax : (86) 10-6601 6871 Swift : BKCHCNBJ
website: www.boc.cn

Singapore Branch : 4 Battery Road, Bank of China Building, Singapore 049908
Tel : (65) 6779 5566 Fax : (65) 6534 3401 Swift : BKCHSGSGXXX
website: www.bankofchina.com/sg

ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை

2020 டிசம்பர் 31ல் நிலவரப்படி

(வேறுவிதமாக குறிப்பிடப்படாவிட்டால் தொகைகள் RMB பில்லியனில்)

	2020	2019
சொத்துகள்		
ரொக்கமும் வங்கிகள் இதர நிதி நிலையங்களிலிருந்து வரவேண்டியதும்	803,145	565,467
மத்திய வங்கிகளிலுள்ள இருப்புகள்	2,076,840	2,078,809
வங்கிகளிலும் இதர நிதி நிலையங்களிலும் உள்ள வைப்புகளும் கொடுக்கப்பட்ட கடன்களும்	939,320	898,959
அரசாங்க கடன் சான்றிதழ்கள் வெளியிடப்பட்ட வங்கி நோட்டுகளுக்குரியவை	168,608	155,466
விலையுயர்ந்த உலோகங்கள்	223,313	206,210
டெரிவேட்டிவ் நிதிச் சொத்துகள்	171,738	93,335
வாடிக்கையாளர்களுக்கு கடனும் முன்பணமும், நிகர முதலீடுகள்	13,848,304	12,743,425
நிதி முதலீடுகள்	5,591,117	5,514,062
- லாபம் அல்லது நட்டத்தின் வழியாக நியாய மதிப்பிலான நிதிச் சொத்துகள்	504,549	518,250
- இதர விரிவான வருமானத்தின் வழியாக நியாய மதிப்பிலான நிதிச் சொத்துகள்	2,107,790	2,218,129
- கடன்தீர்ப்பு விலையிலான நிதிச்சொத்துகள்	2,978,778	2,777,683
இணை நிறுவனங்களிலம் கூட்டுத் தொழில்களிலும் முதலீடு	33,508	23,210
சொத்தும் சாதனமும்	248,589	244,540
முதலீடுச் சொத்து	22,065	23,108
தள்ளிவைக்கப்பட்ட வருமான வரி சொத்துகள்	58,916	44,029
இதர சொத்துகள்	217,196	179,124
மொத்த சொத்துகள்	**24,402,659**	**22,769,744**
பொறுப்புகள்		
வங்கிகள், இதர நிதி நிலையங்களுக்குச் சேரவேண்டியவை	1,917,003	1,668,046
மத்திய வங்கிகளுக்குச் சேரவேண்டியவை	887,811	846,277
புழக்கத்தில் உள்ள வேங்கி நோட்டுகள்	168,751	155,609
வங்கிகள், இதர நிதி நிலையங்களின் வைப்புகள்	411,949	639,675
வர்த்தகத்திற்குள்ள நிதிப் பொறுப்புகள்	17,912	19,475
டெரிவேடிவ் நிதிப் பொறுப்புகள்	212,052	90,060
வாடிக்கையாளர்களுக்கு சேரவேண்டியவை	16,879,171	15,817,548
வெளியிட்ட முறிகள்	1,244,403	1,096,087
இதர கைமாற்றுகள்	26,034	28,011
நடப்பு வரி பொறுப்புகள்	55,665	59,102
ஓய்வுகால அனுகூலப் பொறுப்புகள்	2,199	2,533
தள்ள வைக்கப்பட்ட வருமான வரிப் பொறுப்புகள்	6,499	5,452
இதர பொறுப்புகள்	410,373	365,173
மொத்த பொறுப்புகள்	**22,239,822**	**20,793,048**
பங்குமுதல்		
மூலதனமும் வங்கியின் பங்குமுதல்தாரர்களுக்குரிய காப்புநிதிகளும்		
பங்கு மூலதனம்	294,388	294,388
இதர பங்குமுதல் இனங்கள்	277,490	199,893
மூலதன காப்புநிதி	135,973	136,012
கருவூலப் பங்குகள்	(8)	(7)
இதர விரிவான வருமானம்	4,309	19,613
சட்டப்பூர்வ காப்புநிதி	193,438	174,762
பொது மற்றும் ஒழுங்குமுறை காப்பு நிதிகள்	267,981	250,100
பகிர்வு செய்யப்படாத லாபங்கள்	864,848	776,940
	2,038,419	**1,851,701**
கட்டுபாடற்ற பாத்தியதை	**124,418**	**124,995**
மொத்த பங்குமுதல்	**2,162,837**	**1,976,696**
மொத்த பங்குமுதலும் பொறுப்புகளும்	**24,402,659**	**22,769,744**

ஒருங்கிணைக்கப்பட்ட வருமானவரி அறிக்கை

2020 டிசம்பர் 31ல் முடிவுற்ற ஆண்டுக்குரியது

(வேறுவிதமாக குறிப்பிடப்படாவிட்டால் தொகைகள் RMB பில்லியனில்)

	2020	2019
வட்டி வருமானம்	760,070	758,007
வட்டி செலவினம்	(344,152)	(367,957)
நிகர வட்டி வருமானம்	**415,918**	**390,050**
கட்டணமும் தரகு வருமானமும்	88,640	88,099
கட்டணமும் தரகுச் செலவும்	(13,118)	(14,287)
நிகர கட்டணமும் தரகு வருமானமும்	**75,522**	**73,812**
நிகர் வர்த்தக ஆதாயம்	8,055	28,563
நிதிச் சொத்து பரிமாற்றங்களிலிருந்து நிகர ஆதாயம்	9,547	3,477
இதர நடைமுறை வருமானம்	58,605	54,108
நடைமுறை வருமானம்	**567,647**	**550,010**
நடைமுறை செலவுகள்	(202,411)	(198,269)
சொத்துகளின் சேதார இழப்புகள்	(119,016)	(102,153)
நடைமுறை லாபம்	**246,220**	**249,588**
இணை நிறுவனங்கள், கூட்டுத்தொழில்களின் பலாபலனில் பகிர்வு	158	1,057
வருமான வரிக்கு முந்திய லாபம்	**246,378**	**250,645**
வருமான வரிச் செலவு	(41,282)	(48,754)
ஆண்டுக்குரிய லாபம்	**205,096**	**201,891**
இவற்றுக்கு உரியவை:		
வங்கியின் பங்குமுதல்தாரர்கள்	192,870	187,405
கட்டுப்பாடற்ற பாத்தியதை	12,226	14,486
	205,096	**201,891**
பங்கு ஒன்றின் வருவாய் (RMB நாணயத்தில்)		
- அடிப்படை	0.61	0.61
- ரொக்கமாக்கப்பட்டவை	0.61	0.61

ஒருங்கிணைக்கப்பட்ட விரிவான வருமான அறிக்கை

2020 டிசம்பர் 31ல் முடிவுற்ற ஆண்டுக்குரியது

(வேறுவிதமாக குறிப்பிடப்படாவிட்டால் தொகைகள் RMB பில்லியனில்)

ஆண்டுக்குரிய லாபம்	**205,096**	**201,891**
இதர விரிவான வருமானம்:		
லாபம் அல்லது நட்டத்தில் மறுபகுப்பு செய்யப்படாத அம்சங்கள்		
- வரையறுக்கப்பட்ட அனுகூலத் திட்டங்களின் புள்ளி விவரக் கணக்கீட்டின்படியான ஆதாயம் / (நட்டம்)	101	13
- இதர விரிவான வருமானத்தின்வழி நியாய மதிப்பிலான பங்குமுதல் அம்சங்களில் செய்யப்பட்ட முதலீடுகளின் நியாய மதிப்பில மாற்றங்கள்	(651)	2,146
- மற்றவை	10	(69)
இவற்றின் மொத்தம்	(540)	2,090
லாபம் அல்லது நட்டத்தின் பிற்பாடு மறுபகுப்பு செய்யப்படக்கூடிய அம்சங்கள்		
- இதர விரிவான வருமானத்தின்வழி நியாய மதிப்பில் கணக்கிடப்பட்ட கடன் அம்சங்களினல் செய்யப்பட்ட முதலீடுகளின் கடன்	(2,976)	11,919
- இழப்புக்கான ஒதுக்கீடு	3,084	515
- பங்குமுதல் முறையைப் பயன்படுத்தி கணக்கு வைக்கப்பட்ட இணை நிறுவனங்கள் மற்றும் கூட்டுத் தொழில்களின் இதர விரிவான வருமானத்தில் பகிர்வு	(130)	(440)
- வெளிநாட்டு நடவடிக்கைகளின் அந்நியச் செலாவணி நாணய மாற்று வேறுபாடுகள்	(21,549)	7,089
- மற்றவை	(751)	602
இவற்றின் மொத்தம்	(22,322)	19,685
ஆண்டுகளுக்குரிய இதர விரிவான வருமானம், வரியின் நிகரம்	**(22,862)**	**21,775**
ஆண்டுக்குரிய மொத்த விரிவான வருமானம்	**182,234**	**223,666**
இவற்றிற்குரிய மொத்த விரிவான வருமானம்:		
வங்கியின் பங்குமுதல்தாரர்கள்	177,424	205,601
கட்டுப்பாடற்ற பாத்தியதை	4,810	18,065
	182,234	**223,666**
(சதவிகதத்தைத் தவிர்த்து தொகைகள் RMB மில்லியனில்)		
(சதவிகதத்தைத் தவிர்த்து தொகைகள் RMB மில்லியனில்)		
இடர் சொத்துகள்	15,109,085	14,123,915
ஆதார மூலதன வள விகிதம்	11.28%	11.30%
மூலதன வள விகிதம்	16.22%	15.59%

சுயேச்சை தணிக்கையாளர்களின் அறிக்கை

பேங்க் ஆப் சைனா லிமிடெட் பங்குதாரர்களுக்கு

(சீன மக்கள் குடியரசில் குறுகிய பொறுப்புடன் நிறுவிக்கப்பட்டது)

கருத்து

நாங்கள் 31 டிசம்பர் 2020 தேதியில் முடிவுற்ற ஆண்டுக்குரிய பக்கங்கள் 193 முதல் 417 வரை இடம்பெறும், பேங்க் ஆப் சைனா லிமிடெட் (வங்கி) மற்றும் அதன் துணை நிறுவனங்கள் (தொகுதி) ஆகியவற்றின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகளைத் தணிக்கை செய்திருக்கிறோம். அத்தேதியில் முடிவுற்ற ஆண்டுக்குரிய ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகள், ஒருங்கிணைக்கப்பட்ட வருமான அறிக்கை, ஒருங்கிணைக்கப்பட்ட பங்குமுதல் மாற்றங்கள் அறிக்கை, ஒருங்கிணைக்கப்பட்ட ரொக்க பழக்க அறிக்கை ஆகியவையும் குறிப்பிடத்தக்க கணக்குக் கொள்கைகளின் சுருக்கம் உள்ளடங்கும் ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகளின் குறிப்புகளும் இதில் அடங்கும். எங்கள் கருத்துப்படி, ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகள் 31 டிசம்பர் 2020 நிலவரப்படி, தொகுதியின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலையையும், முடிவுற்ற ஆண்டில் அதன் ஒருங்கிணைக்கப்பட்ட நிதி செயல்பாடு மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட ரொக்கப் பழக்கத்தையும் அனைத்துலகக் கணக்கில் தரங்கள் மன்றம் (IASB) வெளியிட்ட அனைத்துலக நிதிநிலை தரக்கல் தரங்களுக்கு (IFRSs) ஏற்பவும் ஹாங்காங் நிறுவனங்கள் ஆணையின் வெளியீட்டு விதிகளுக்கு ஏற்பவும் முறையாகத் தயாரித்து, உண்மையாகவும் நியாயமாகவும் படைக்கின்றன.

கருத்துக்கான அடிப்படை

நாங்கள் அனைத்துலக தணிக்கை மற்றும் தர உறுதி மன்றம் வெளியிட்ட அனைத்துலக தணிக்கை தரங்களுக்கு (ISAs) ஏற்ப தணிக்கையை நடத்தினோம். இந்தத் தரங்களின்கீழ் எங்களுக்குள்ள பொறுப்புகள் எங்கள் அறிக்கையின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகளின் தணிக்கையில் தணிக்கையாளரின் பொறுப்புகள் பகுதியில் மேற்கொண்டு விளக்கப்பட்டுள்ளன. நாங்கள் ஹாங்காங் சான்றுபெற்ற பொது கணக்காளர்கள் கழகம் வெளியிட்ட வெளியிட்ட நிபுணத்துவக் கணக்காளர்களுக்கான நெறிமுறைக் குறிப்பேடுக்கு (குறியீடு) ஏற்ப தொகுதியுடன் தொடர்பில்லாதா சுதந்திர அமைப்பாகச் செயல்பட்டு. குறியீட்டின்படி எங்களது மற்ற நெறிமுறைப் பொறுப்புகளை நிறைவேற்றினோம். நாங்கள் பெற்ற தணிக்கை ஆதாரங்கள் போதுமானவை என்றும் எங்கள் கருத்துக்கு அடிப்படை வழங்கப் பொருத்தமானவை என்றும் நாங்கள் நம்புகிறோம்.

முக்கிய தணிக்கை விவகாரங்கள்

முக்கிய தணிக்கை விவகாரங்கள் என்பது நிபுணத்துவ மதிப்பீட்டின்படி, நடப்பு காலக்கட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகள் குறித்த எங்கள் தணிக்கைக்கு மிகவும் முக்கியத்துவமிக்க விவகாரங்களாகும். ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகளின் ஒட்டுமொத்த தணிக்கையின் மிகவும் முக்கியத்துவமிக்க விவகாரங்களாகும். ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகளின் ஒட்டுமொத்த தணிக்கையின் அடிப்படையில் இவ்விவகாரங்கள் ஆராயப்பட்டு, அதற்கேற்ப எங்கள் கருத்தை வகுக்கையில், இவ்விவகாரங்கள் குறித்து தனியொரு கருத்தை நாங்கள் வெளியிடவில்லை. பின்வரும் ஒவ்வொரு விவகாரத்திற்கும், அதனதன் சூழ்நிலைப்படி அவ்விவகாரத்தை எங்கள் தணிக்கை எவ்வாறு கையாண்டது என்பது விளக்கப்ட்டுள்ளது. எங்கள் அறிக்கையின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகளின் தணிக்கையில் தணிக்கையாளரின் பொறுப்புகள் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்புகளை நாங்கள் நிறைவேற்றியிருக்கிறோம். அதற்கேற்ப, ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகளின் விவரப் பிழைகள் ஏற்படக்கூடிய இடர் குறித்த எங்கள் மதிப்பீட்டின்படி வடிவமைக்கப்பட்ட நடைமுறைகளை மேற்கொள்வதும் எங்கள் தணிக்கையில் உள்ளடங்கியது. பின்வரும் விவகாரங்களைக் கையாள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள் உள்ளிட்ட எங்கள் தணிக்கை நடைமுறைகளின் முடிவுகள், இணைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகள் குறித்த எங்கள் தணிக்கை கருத்து அடிப்படையாக அமைகின்றன.

முக்கிய தணிக்கை விவகாரம்: வாடிக்கையாளர்களுக்கான கடன்கள், முன்பணங்கள் சேதாரக் கணிப்பு

எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளின் அளவீட்டின் தொகுதி பற்பல மாதிரிவங்களையும் ஊகங்களையும் பயன்படுத்துகிறது. எடுத்துக்காட்டாக:

• கடன் இடரில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு - கடன் இடரில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பை அடையாளம் காண்பதற்கான நிபந்தனைகளின் தேர்ந்தெடுப்பு மதிப்பீட்டை பெரிதும் சார்ந்திருக்கிறது. அதோடு, முதிர்ச்சிக்கு நீண்ட எஞ்சிய காலக்கட்டமுள்ள கடன்களுக்கான எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகள் மீது குறிப்பிடத்தக்க விளைவுகளும் நேரலாம்.

• மாதிரிவடிவங்களும் வரையறைகளும் - எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளை அளிவிடுவதற்காக சிக்கலான உள்ளமைப்பு கொண்ட மாதிரிவடிவங்கள் பயன்படுத்தப்படுகின்றன. முன்வடிவ வரையறைகளில் பல உள்ளீடுகள் இருப்பதோடு, வரையறைகளின் கணிப்பில் பல மதிப்பீடுகளும் ஊகங்களும் உள்ளடங்குகின்றன.

• முன்னோக்குத் தகவல் - பரந்த பொருளியல் முன்னுரைப்புகளை உருவாக்குவதற்கும் மாறுப்பட்ட எடைகளுள்ள பற்பல பொருளியல் சூழ்நிலைகளின்கீழ் எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளின் விளைவுகளைப் பரிசீலிப்பதற்கும் வல்லுநர்களின் மதிப்பீடு பயன்படுத்தப்படுகிறது.

• தனிப்பட்ட சேதாரக் கடன்களை அடையாளம் காண்பதற்கு ஏராளமான காரணிகளைக் கவனத்தில் கொண்டு கொள்ள வேண்டும். அதோடு, தனிப்பட்ட சேதாரு ஆராய்வுகள் எதிர்கால ரொக்கப் பழக்கக் கணிப்புகளைச் சார்ந்துள்ளன.

கடன் சேதாரக் கணிப்பில் பல மதிப்பீடுகளும் ஊகங்களும் உள்ளடங்குவதாலும், தொகை குறிப்பிடத்தக்கது என்பதாலும் (31 டிசம்பர் 2020 நிலவரப்படி, வாடிக்கையாளர்களுக்கான மொத்த கடன்களும் முன்பணங்களும் RMB14,216,477 மில்லியன், இது மொத்த சொத்துகளில் 58% ஆகும், வாடிக்கையாளர்களுக்கான கடன்கள், முன்பணங்களுக்கான சேதார ஒதுக்கீடு RMB368,619 மில்லியன்), கடன்கள், முன்பணங்களுக்கான சேதாரம் முக்கியம் தணிக்கை விவகாரமாகக் கருதப்படுகிறது. இது தொடர்பான விவர வெளிப்பாடுகள் ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகளின் குறிப்பு II.4, III.1, V.17, VI.3 ஆகியவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

முக்கிய தணிக்கை விவகாரத்திற்கு எங்கள் தணிக்கை எவ்வாறு தீர்வு கண்டது

கடன் அங்கீகரிப்பு முறை, அங்கீகரிப்புக்குப் பிந்திய கடன் நிர்வாகம், கடன் தரப்புகுப் முறை, ஈட்டுப்பொருள் கண்காணிப்பு, கடன் சேதாரக் கணிப்பு ஆகியவை தொடர்பான முக்கிய கட்டுப்பாடுகளின் வடிவமைப்பு, அமலாக்கம் ஆகியவற்றின் செயலாற்றலை நாங்கள் பரிசீலித்து, சோதித்து பார்த்தோம். சம்பந்தப்பட்ட தரவுத் தரம், தகவலமிப்பு செயல்முறைகள் ஆகியனவும் இதில் உள்ளடங்கும். எங்களது கடன் மறுஆய்வு நடைமுறைகளில் இடர் அடிப்படையிலான மாதிரிக்கூறுகளைத் தேர்ந்தெடுக்கும் அணுகுமுறையைக் கடைப்பிடித்தோம். கடன் எடுத்தவரின் கடனைப்பு ஆற்றலைக் கணித்து, தொகுதியின் கடன் தரப்பிரிப்பைப் பரிசீலித்தோம். இதற்கென, கடனளிப்புப் பிந்திய புலனாய்வு அறிக்கைகள், கடன் எடுத்தவரின் நிதி விவரங்கள், ஈட்டுப்பொருள் மதிப்பீட்டு அறிக்கைகள், கிடைக்கப்பெற்ற இதர விவரங்கள் ஆகியவற்றில் கவனத்தில் கொண்டோம். எங்களது உள் கடன் விவரங்கள் இடர் மாதிரிவடிவ வல்லுநர்களின் ஆதரவுடன், எதிர்பார்க்கப்படும் கடன் இடர் மாதிரிவடிவம், நிர்வாகத்தின் முக்கிய மதிப்பீடுகள், அதைச்சார்ந்த ஊகங்கள் ஆகியவற்றின் முக்கிய அளவீடுகள் ஆகியவற்றைப் பரிசீலித்து சோதனை செய்வதில், பின்வரும் முக்கிய அம்சங்களில் கவனம் செலுத்தினோம்:

1. எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பு மாதிரிவடிவம்:

• பெரிய பொருளாதார மாற்றங்கள், COVID-19 பெருந்தொற்றின் தாக்கங்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகளிமிருந்து ஆதரிக்கும் கொள்கைகளுக்கு பதிலளிக்கும் விதமாகவும், எதிர்பார்க்கப்படக் கடன் இழப்பு மாதிரி வடிமைப்பு மற்றும் பிழை செய்வதற்கான சாத்தியக்கூறுகள், பிழையினால் ஏற்படட இழப்பு, பிழைக்கான வெளிப்பாடு மற்றும் கடன் இடரில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை உள்ளக்கி, தொடர்புடைய அளவுகுக்களைளின் நியாயமானதன்மையை நாங்கள் மதிப்பிட்டோம்.

• பரந்த பொருளியல் மாறுபாடுகளின் முன்னரைப்பு பற்பல பரந்த பாருளியல் சூழ்நிலைகளின் ஊகங்கள் உட்பட, எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளை நிர்ணயிப்பதற்கு நிர்வாகம் பயன்படுத்திய முன்னோக்கு தகவல் ஆராய்ப்பட்டது.

• தனிப்பட்ட சேதார ஆய்வில் பயன்படுத்தப்பட்ட மாதிரிவடிவங்களையும் அவை சுரர்ந்த ஊகங்களையும் பரிசீலித்து, நிர்வாகம் கணித்த எதிர்கால ரொக்கப் பழக்கம், குறிப்பாக ஈட்டுப்பொருளின் ரொக்கப் பழக்கத் தொகை, காலகட்டம், சாத்தியம் ஆகியன ஆராயப்பட்டன.

2. முக்கிய கட்டுப்பாடுகளின் வடிவமைப்பு மற்றும் செயல்பாட்டுத்திறன் :

• கடன் தொழில் தரவு, உள் கடன் தரத் தரவு, பரந்த பொருளியல் தரவு மற்றும் சேதார இயங்குமறை கணக்கீட்டுக் கொள்கை, தேவையான இயங்முறைகளின் உள்ளீடுகள் மற்றும் இடைபாடுகள் ஆகியன உட்பட எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பை நிர்ணயிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட தரவுகளும் நடைமுறைகளும் பரிசிலிக்கப்பட்டு, சோதனை செய்யப்பட்டன.

• மாதிரிவடிவ மாற்றங்களுக்கான அங்கீகாரம், மாதிரிவடிவத்தின் தொடர் கண்காணிப்பு முறையின் செயல்பாடு, மாதிரிவடிவத்தின் உறுதிப்பாடு வரையறைகளின் அளவீடு உட்பட எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பு மாதிரிவடிவங்களிதான முக்கிய கட்டுப்பாடுகள் பரிசீலிக்கப்பட்டு, சோதனை செய்யப்பட்டன.

நாங்கள் கடன் இடர் மற்றும் சேதார ஒதுக்கீடு வெளிப்பாடுகள் தொடர்பான உள் கட்டுபாடுகளின் வடிவமைப்பையும் செயலாற்றலையும் பரிசீலனை செய்து, சோதித்துப் பார்த்தோம்.

முக்கிய தணிக்கை விவகாரம்: நிதி அம்சங்களின் மதிப்பீடு

நடப்புச் சந்தைகளில் விலையாடப்படாத நிதி அம்சங்களின் நியாய மதிப்பை நிர்ணயிக்க மதிப்பீட்டு உத்திகளைத் தொகுதி பயன்படுத்தியது. முறிகள், பங்குமுதல் முதலீடுகள், முகப்பு டெரிவேட்டிவுகள் இதில் உள்ளடங்கும். இங்கு மதிப்பீட்டு உத்திகளில், குறிப்பாக கவனத்திற்கு வராத குறிப்பிடத்தக்க உள்ளீடுகள் தேவைப்படும் உத்திகளில், பொது தற்சார்புள்ள மதிப்பீடும் ஊகங்களும் இடம்பெறும். வெவ்வேறு மதிப்பீட்டு உத்திகளையும் ஊகங்களையும் பயன்படுத்தும்போது, மதிப்பீட்டு முடிவுகள் குறிப்பிடத்தக்க அளவு வேறுபடக்கூடும். 31 டிசம்பர் 2020 நிலவரப்படி, நியாய மதிப்பில் அளிவடப்பட்ட தொகுதியின் நிதி அம்சங்களின் RMB2,612,339 மில்லியன் நிதி முதலீடுகள் உள்ளடங்கின. இது மொத்தச் சொத்துக்களில் 11%ஐ பிரதிநிதித்தது. நியாய மதிப்பைக் கணிப்பதற்குக் கவனத்திற்கு வராத குறிப்பிடத்தக்க உள்ளீடுகள் தேவைப்படுவதால் நியாய மதிப்பு தரவரிசையில் நிலை 3ல் பகுக்கப்படும் நிதி அம்சங்களின் மதிப்பீட்டில் உயர் நிச்சயமின்மை நிலவும். 31 டிசம்பர் 2020 நிலவரப்படி, நியாய மதிப்பில் அளிவிடப்பட்ட நிதிச் சொத்துகளில் 5% நிலை 3 பிரிவில் பகுக்கப்பட்டது. நியாய மதிப்பில் அளிவிப்பட்ட நிதி அம்சங்களின் குறிப்பிடத்தக்கத்தன்மையாலும், பட்டியலிடப்படாத பங்குமுதல் மற்றும் நிதி முதலீடுகள், ரொக்கமாக்கமுடியாத சொத்தை ஆதாரமாகக் கொண்ட பங்குப் பத்திரங்கள் ஆகியவற்றின் குறிப்பிடத்தக்க மதிப்பீட்டில் நிச்சயமின்மை நிலவுவதாலும், நிதி அம்சங்களின் மதிப்பீடு முக்கிய தணிக்கை விவகாரமாகக் கருதப்படுகிறது. இதற்குத் தேவையான விவர வெளிப்பாடுகள் ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகளின் குறிப்பு III.2 மற்றும் VI.60ல் உள்ளடக்கப்பட்டுள்ளன.

முக்கிய தணிக்கை விவகாரத்திற்கு எங்கள் தணிக்கை எவ்வாறு தீர்வு கண்டது

நாங்கள் நிதி அம்சங்களின் மதிப்பீடு, சுயேச்சையான விலை சரிபார்ப்பு, சுயேச்சையான மாதிரிவடிவச் செயல்முறை உறுதிப்பாடு, அங்கீகரிப்பு ஆகியவை தொடர்பான முக்கிய கட்டுப்பாடுகளின் வடிவமைப்பையும் செயலாற்றலையும் பரிசீலனை செய்து, சோதித்துப் பார்த்தோம். நாங்கள் சந்தைகளில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் மதிப்பீட்டு உத்திகளுடன் ஒப்பிட்டு பார்த்தும், வெளிச் சந்தை தரவைப் பயன்படுத்தும் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட உள்ளீடுகளை உறுதிப்படுத்தியும், பல்வேறு விலை நிர்ணயிப்பு மூலங்களிலிருந்து பெறப்பட்ட மதிப்பீட்டு முடிவுகளுடன் ஒப்பிட்டு பார்த்தும், மதிப்பீட்டு உத்திகள், உள்ளீடுகள், ஊகங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தோம். கவனத்திற்கு வராத குறிப்பிடத்தக்க உள்ளீடுகள் பயன்படுத்தப்பட்ட பட்டியலிடப்படாத பங்குமுதல் முதலீடுகள், தனியார் பங்குமுதல் நிதி முதலீடுகள் போன்ற மதிப்பீடுகளைப் பொறுத்தவரை, பன்படுத்தப்பட்ட மாதிரிவடிவச் செயல்முறைகளைப் பரசீலிக்கவும், சுயேச்சையான மதிப்பீடுகளை மீண்டும்ட செய்யவும், மதிப்பீட்டின் முடிவுகளால் முக்கிய உள்ளீடுகளிலும் ஊகங்களிலும் நேரும் விளைவுகளை ஆராயவும் எங்களுது உள் மதிப்பீட்டு வல்லுநர்களை ஈடுபடுத்தினோம். நியாய மதிப்பிலான வெளிப்பாடுகள் தொடர்பான உள் கட்டுபாடுகளின் வடிவமைப்பையும் செயலாற்றலையும் பரிசீலனை செய்து, சோதித்துப் பார்த்தோம்.

முக்கிய தணிக்கை விவகாரம்: கட்டமைப்புத் திட்டங்கள்

நிதி முதலீடுகள், சொத்து நிர்வாகத் தொழில், கடன் சொத்து இடப்பெயர்வு ஆகியவற்றை நடத்துவதற்கு, வங்கி சொத்து நிர்வாகத் திட்டங்கள், நிதிகள் மற்றும் ட்ரஸ்ட் திட்டங்கள் போன்ற பல்வேறு கட்டமைப்புத் திட்டங்களில் தொகுதிக்குப் பாத்தியதை உள்ளது. உரிமைகளின்மூலம் கிடைக்கும் அதிகாரம், மாறுவிதித பலாபலன்கள், அதிகாரத்திற்கும் பலாபலனுக்கும் இடையிலான தொடர்பு ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளும்போது தொகுதிக்குக் கட்டுப்பாடு இருக்கிறதா என்ற கணிப்பின் அடிப்படையில், இந்தக் கட்டமைப்புத் திட்டங்களை ஒருங்கிணைப்பதா இல்லையா என்பதைத் தொகுதி நிர்ணயிக்கிறது. கட்டமைப்புத் திட்டங்களின்மீது தொகுதிக்கு உள்ள கட்டுப்பாடு குறித்தக் கணிப்பில் கட்டமைப்புத் திட்டங்களில் நோக்கம் மற்றும் மறுவடிவமைப்பு, சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை இயக்கும் ஆற்றல், நேரடியான மற்றும் நேரடியற்ற சாதகங்கள் மற்றும் பலாபலன்கள், செயல்பாட்டுக் கட்டணம், ஊதியம், கடன் அதிகரிப்பு, அல்லது ரொக்கமாக்கல் ஆதரவு வழங்குவதால் ஏற்படும் திட்டம் ஆகியவற்றின் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகள் உள்ளடங்கும். ஒருங்கிணைக்கப்படாத கட்டமைப்புத் திட்டங்களின் குறிப்பிடத்தக்கத்தன்மையாகும். நிர்வாகம் பயன்படுத்தும் மதிப்பீட்டின் காரணத்தாலும், கட்டமைப்புத் திட்டங்களை ஒருங்கிணைப்பதா இல்லையா என்பதை முக்கிய தணிக்கை விவகாரமாகக் கருதப்படுகிது. இது தொடர்பான விவர வெளிப்பாடுகள் ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகளின் குறிப்பு III. 7 மற்றும் V. 46ல் உள்ளடக்கப்பட்டுள்ளன.

முக்கிய தணிக்கை விவகாரத்திற்கு எங்கள் தணிக்கை எவ்வாறு தீர்வு கண்டது

நாங்கள் கட்டமைப்புத் திட்டம் தனது கட்டுபாட்டில் இருக்கிறதா என்பது குறித்து தொகுதி செய்த கணிப்பு தொடர்பான முக்கிய கட்டுபாடுகளின் வடிவமைப்பையும் செயலாற்றலையும் பரிசீலனை செய்து, சோதித்துப் பார்த்தோம். கட்டமைப்புத் திட்டங்கள் தனது கட்டுப்பாட்டில் இருக்கிறதா இல்லையா என்பது பற்றி தொகுதி செய்த ஆராய்வையும் முடிவுகளையும், கட்டமைப்புத் திட்டங்கள் மீதான தனது அதிகதாரம் குறித்து தொகுதிசெய் ஆராய்வு, நட்டம் ஏதேபேனும் ஏற்கவேண்டிய சட்டப்பூர்வ அல்லது ஆக்கப்பூர்வ கடப்பாடு தொகுதிக்கு இருக்கிறதா என்பதையும், கட்டமைப்புத் திட்டங்களுக்குத் தொகுதி பணமாக்கல் ஆதரவு அல்லது கடன் உயர்வு வழங்கியிருக்கிறதா என்பதையும், தொகுதிக்கும் கட்டமைப்புத் திட்டங்களுக்கும் இடையிலான பரிவர்த்தனைகளில் நியாயத்தையும் நாங்கள் பரிசீலனை செய்தோம். ஒருங்கிணைக்கப்படாத கட்டமைப்புத் திட்டங்களின் வெளிப்பாடுகள் தொடர்பான உள் கட்டுப்பாடுகளின் வடிவமைப்பையும் செயலாற்றலையும் பரிசீலனை செய்து, சோதித்துப் பார்த்தோம்.

ஆண்டு அறிக்கையில் சேர்க்கப்பட்ட இதர விவரங்கள்

இதர விவரங்களுக்கு வங்கியின் இயக்குநர்களே பொறுப்பாவர். இதர விவரங்களில், ஒருங்கிணைக்கப்படாத நிதி அறிக்கைகளிலும் அதுகுறித்த எங்கள் தணிக்கையாளர்களின் அறிக்கையிலும் உள்ள விவரங்களைத் தவிர, ஆண்டு அறிக்கையிலுள்ள விவரங்கள் உள்ளடங்கும். ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகள் குறித்த எங்கள் கருத்தில் இந்த மற்ற விவரங்கள் உள்ளடங்கவில்லை. அதோடு, இது தொடர்பாக எந்தவித உறுதியான முடிவையும் நாங்கள் வெளியிடவில்லை. ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகளைத் தணிக்கை செய்வதில், இதர விவரங்களையும் வாசித்து, அவ்வாறு செய்யும்போது, ஒருங்கிணைக்கப்பட்ட நிதி அறிக்கைகளுடன் அல்லது தணிக்கையில் நாங்கள் கண்டுபிடித்தவற்றுடன் இதர விவரங்கள் ஒத்திருக்கிறதா அல்லது விவரப் பிழை இருப்பதுபோலத் தெரிகிறதா என்பதைப் பரிசீலிப்பது எங்கள் பொறுப்பு. நாங்கள் செய்த தணிக்கையை அடிப்படையாகக் கொண்டு, இதர விவரங்களில் விவரப் பழை இருப்பதாக நாங்கள் முடிவுக்கு வந்தால், இது குறித்து நாங்கள் தகவல் தெரிவிக்க வேண்டும். இது தொடர்பாக நாங்கள் தக